## விதிகளை மீறிப் பிரச்சாரம்: நடிகர் விஜய் பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 39 பேர் பலி!

# கரூரிலிருந்து வரும் செய்திகள் கவலையளிக்கின்றன!

## தேவையான உதவிகளை மேற்கொள்ள உத்தரவு! கரூர் விரைந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு வேண்டுகோள்!

சென்னை, செப்.29–

**கரூரில் நேற்று முன்தினம் நடிகர் விஜய் பிரச்சாரம் மேற்கொண்டார். இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில் சிக்கி குழந்தைகள் உட்பட 39க்கும் மேற்பட்டோர் பலியான சோக நிகழ்ச்சி அனைத்துத் தரப்பு மக்களின் நெஞ்சங்களையும் பதற வைத்துள்ளது.**

50–க்கும் மேற்பட்டோர் மயக்கமுற்றும், பல உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ள நிலையில் கரூர் மருத்துவமனையில் பெரும் பரபரப்பு காணப்படுகிறது. 100க்கணக்கானோர் மருத்துவமனை முன் குவிந்து கதறி அழும் காட்சி காண்போரை கலங்கச் செய்துள்ளது.

தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜியை தொடர்பு கொண்டு மருத்துவமனைக்கு விரைந்து சென்று தேவையான உதவிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். வி.செந்தில்பாலாஜி மருத்துவமனைக்கு விரைந்து சென்று உரிய உதவிகளை மேற்கொண்டார்.

அத்துடன் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோரையும் கரூருக்கு விரைந்திட உத்தரவிட்டார்.

கரூரில் ஏற்பட்டுள்ள அசம்பாவிதம் குறித்து மாவட்ட ஆட்சியரிடமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்ததுடன் தேவையான உதவிகளைச் செய்திடுமாறு உத்தரவிட்டார்.

மேலும் திருச்சி, சேலம், நாமக்கல் மாவட்டங்களிலிருந்து மருத்துவக்குழுவும் கரூர் விரைந்துள்ளது. பாதிக்கப்பட்டோருக்கு உரிய சிகிச்சையை விரைந்து வழங்கிட முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

காவல்துறை உயர் அதிகாரிகளையும் கரூருக்கு விரைந்திட முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

விதிகளை மீறி நடிகர் விஜய் பிரச்சாரம் மேற்கொண்டதால்தான் இத்தகைய சம்பவம் நடைந்தேரியிருக்கிறது.

### கரூருக்கு விரைந்தார் முதல்வர்!

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு தலைமைச் செயலகத்தில் ஆலோசனை மேற்கொண்ட முதல்வர் அவர்கள் உடனடியாக நேற்று இரவே கரூர் விரைந்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘ட்விட்டர்’ பதிவில் கரூர் செய்திகள் கவலையளிக்கின்றன என வேதனை தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

**கூட்ட நெரிசலில் சிக்கி மயக்கமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்குத் தேவையான உடனடி சிகிச்சைகளை அளித்திடும்படி,**

**முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, அமைச்சர் மா.சுப்பிரமணியன் – மாவட்ட ஆட்சியரையும் தொடர்புகொண்டு அறிவுறுத்தியுள்ளேன்.**

**அருகிலுள்ள திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களிடமும் போர்க்கால அடிப்படையில் தேவையான உதவியினைச் செய்து தரும்படி உத்தரவிட்டிருக்கிறேன். அங்கு, விரைவில் நிலைமையைச் சீராக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ADGPயிடமும் பேசியிருக்கிறேன்.**

**பொதுமக்கள் மருத்துவர்களுக்கும் காவல் துறைக்கும் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாநகராட்சி மற்றும் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களை துவக்கி வைத்து பணிகளை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு செய்தார் இந்த முகாம்களில் மாநகர செயலாளர் – மண்டல குழு தலைவருமான மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் சிவக்குமார், மாமன்ற உறுப்பினர் ரேக்ஸ் , மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் இதே போல் வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை மற்றும் திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன் உட்பட அரசு அதிகாரிகள் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் இந்த முகாம்களில் கலந்து கொண்டனர்.




அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் நடைபெற்ற நேரலை ஒளிப்பரப்பு நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமிழ்ப்புதல்வன் திட்டத்தினை துவக்கி வைத்து, மாணவர்களுக்கு வங்கிப் பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.

### நாகையில் 1,753 பயனாளிகளுக்கு

## ரூ.27,34,22,995 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

நாகை, செப்.28–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் மேம்பட முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் எண்ணற்ற பல திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மகளிர்களுக்கு பல்வேறு நலதிட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.6,72,000 மதிப்பீட்டில் 08 மாற்றுத்திறனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்க நாணயம், ரூ.3,05,400 மதிப்பீட்டில் 03 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் ரூ.63,000 மதிப்பீட்டில் 04 மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலி போன்றவைகளையும், வருவாய் துறை சார்பில் ரூ. 21,44,84,045 மதிப்பீட்டில் ஊரகம் மற்றும் நகரம் பகுதிகளை சேர்ந்த 1,108 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாவினையும்,ஊரக வளர்ச்சி துறை சார்பில் ரூ.54,00,000 மதிப்பீட்டில் 20 பயனாளிகளுக்கு சுனாமி வீடுகள் சீரமைத்தல் திட்டத்தின் கீழ் வேலை உத்தரவு ஆணையினையும்,

மகளிர் திட்டம் சார்பில் ரூ.99,00,000 மதிப்பீட்டில் 10 பயனாளிகளுக்கு வங்கி கடன் இணைப்பு ஆணையினையும், கூட்டுறவு துறை சார்பில் ரூ.4,04,45,000 மதிப்பீட்டில் 40 பயனாளிகளுக்கு ஆடு,கறவை மாடு வளர்ப்பு, சுய உதவி குழு வங்கி கடன் தொகைக்கான ஆணையினையும், வேளாண்மை துறை சார்பில் ரூ.8,000 மதிப்பீட்டில் 02 பயனாளிகளுக்கு அட்மா திட்ட செயல்விளக்க மின்கல தெளிப்பானையும், தோட்டக்கலை துறை சார்பில் ரூ.3,000 மதிப்பீட்டில் 01 பயனாளிக்கு மா கன்றுகளையும், ரூ.50,000 மதிப்பீட்டில் 01 பயனாளிக்கு தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் மண்புழு உரக்கூடம் அமைப்பதற்கான தொகையையும்,

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ.53,700 மதிப்பீட்டில் 09 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம், இலவச தேய்ப்பு பெட்டிகளையும், தாட்கோ சார்பில் ரூ.17,27,378 மதிப்பீட்டில் 02 பயனாளிகளுக்கு சுற்றுலா வாகனம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.3,11,472 மதிப்பீட்டில் 160 பயனாளிகளுக்கு இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளு க்கு 75 விழுக்காடு மானியத்தில் உயிர்காப்பு சட்டைகள், மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பில் 20 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 160 பயனாளிகளுக்கு பழங்குடியினர் நல அட்டை என மொத்தம் 1,753 பயனாளிகளுக்கு ரூ.27,34,22,995 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித் துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வ.பவணந்தி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி கே.ஸ்ருதி அவர்கள், நாகப்பட்டினம் நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து,நாகப்பட்டினம் நகர மன்ற துணைத்தலைவர் செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கரூர் பெருந்துயரம்!

## திருவாரூர் கவிதைப்போட்டி ஒத்திவைப்பு!

### பூண்டி.கலைவாணன் அறிவிப்பு!

திருவாரூர்,செப். 29-

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர், பேரறிஞர் அண்ணா ஆகியோர் படைப்புகள் குறித்து நடத்தப்பட இருந்த கவிதை போட்டி கரூர் பெருந்துயரம் காரணமாக தலைமை கழகத்தின் அறிவிப்பின்படி ஒத்திவைக்கப்படுகிறது என மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் தெரிவித்துள்ளார்.

கரூரில் ஏற்பட்ட பெரும்துயரத்தை எண்ணி மனவேதனடைந்த தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள் நள்ளிரவு என்றாலும், தனது உடல் நிலை யைக் கூட பொருட்படுத்தாமல் கரூருக்கு வந்து பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, அவர்தம் குடும்ப த்தாருக்கு இழப்பீட்டு தொகையை அறிவித்ததோடு, நீதி விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது வெளிநாட்டு பயணத்தை பாதியிலேயே ரத்து செய்து பாதிக்கப்பட்ட இடத்திற்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று ஆறுதல் கூறினார். ஒட்டுமொத்த மருத்துவ நிபுணர்களும் கரூருக்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தலைமை கழகத்தின் அறிவிப்பின்படியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையிலும் கழக நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது என்கின்ற மனிதாபிமான அறிவிப்பின் அடிப்படையில், திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரது படைப்புகள் குறித்த கவிதை எழுதும் போட்டி ரத்து செய்யப்படுகிறது. மேலும் உயிரிழந்த அனைவருக்கும் திருவாரூர் மாவட்டத்தின் சார்பில் கழக தலைவர் அவர்களின் வழியில் அஞ்சலியையும்,அவர்தம் குடும்பத்தாருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்த போட்டி குறித்த அடுத்த தேதி விரைவில் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு முறைப்படி அறிவிக்கப்படும் என்பதை மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே . கலைவாணன் எம்.எல்.ஏ. குறிப்பிட்டுள்ளார்

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கே. முனியசாமி**

**செப்டம்பர் 29 (2009)**



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மா.பா.சா.பன்னீர்செல்வம்**

**செப்டம்பர் 29 (2014)**



கழக முன்னோடிகளில் ஒருவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த மா.பா.சாரதி அவர்களின் மகன். தலைமை செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், கூட்டுறவு கட்டிட சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இரண்டுமுறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.